சமுதாய நலன் குறித்து செய்கின்ற இத்தகைய காரியங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமே தவிர அதை எதிர்த்து போகிற போக்கைத் தவிர்க்க வேண்டுமென்று இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதன் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : ஜப்பான் நாட்டிலே நடைபெறுவதைப்போல் உடல் ஊனமுற்றோர்களுக்கு என்று தனியாக பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை குற்றவியல் நீதிபதிகள் பதவிக்கு நியமனம் செய்யும் திட்டம்.

*வினா எண். 328—**திரு. மே. அ. இராஜ்குமார் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நீதித்துறையில் இரண்டாம் நிலை குற்ற இயல் நீதிபதிகள் பதவிக்கு வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை நியமனம் செய்யவிருக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அம்முறை எப்பொழுது செயலபடுத்தப் படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒருங்கிணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. அப்படி செயல்படுத்தப்பட்டவுடன், வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் அந்த ஒருங்கிணைக்கப்பட இருக்கும் மாவட்ட முன்சீப் மற்றும்—மாஜிஸ்டிரேட்டு பதவிக்கு நியமிக்கப்படுவர்.

ஆற்காட்டில் குற்றவுயல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 329, **திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் கொண்டுவர செயல்குறிப்பு அரசிடமுள்ளதா?

1982 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில் விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) ஆம். ஆற்காட்டில் ஒரு நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, ஆற்காடில் இரண்டாவது குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க சந்தோஷம். அது எந்த மாதத்தில் தொடங்கப்படுகிறது என்பதையும், அதற்கு ஆகக்கூடிய செலவு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த மாதத்தில் என்றும், என்ன செலவு என்றும் கேட்கிறார்கள். செலவைப் பொறுத்தவரைக்கும் சொந்தமாக இடம் கட்டுவதாக இருந்தால் அதிகச் செலவு ஏற்படும். வாடகை இடத்தில் அமைக்கப்பட்டால் செலவு குறைந்துவிடும். கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. உயர்நீதி மன்றமும் பரிந்துரை செய்துள்ளது. அரசு அதை நடைமுறைப்படுத்தும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவும்பொழுது எந்தெந்த காவல் நிலையங்களிலிருந்து குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்வதற்கு இணைக்கப்படும் என்பதையும், சப்-டிரஷரி, தாலுக்கா ஆபீஸ், சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ் ஆகியவை கோர்ட் நிறுவப்படும் இடத்தில் இருப்பதால தாலுக்கா அளவில் காவல் நிலையத்தை அங்கே துவங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தக் காவல் நிலையங்கள் அதோடு இணைக்கப்படும் என்ற குறிப்பு இல்லை. உயர்நீதிமன்றத்திலிருந்து பெற்றுத்தான் தர முடியும். காவல் நிலையம் அமைக்கப்படுவது பற்றித் தனியாக அந்தத் துறை கவனிக்க வேண்டும். உறுப்பினரின் கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.